சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 04.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **82/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | கவிதா |
| கணவர் பெயர் | : | மோகன் |
| கிராமம் | : | ஏத்தக்குடி |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 45 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

6 ம் எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையர் வகுப்பு சேர்ந்தவன் ஆவேன். ஆஜராகியுள்ள 6 ம் எதிரியை எனக்கு தெரியும், அவரும் எனது ஊரை சேர்ந்தவர் ஆவார். ஆஜர் எதிரி கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். கடந்த 31.12.2016 ம் தேதி இரவு 12.45 மணிக்கு அதாவது

01.01.2017 ம் தேதி அதிகாலையில் புதுவருடம் பிறந்தது தொடர்பாக புத்தாண்டு வாழ்த்துக்கள் என சாலையில் எழுதிக்கொண்டிருந்தது தொடர்பாக எங்கள் ஊரை சேர்ந்தவர்களுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டது. அப்போது என் கணவர் வீட்டிற்கு வெளியில் போய் பார்த்தார். யாரோ ஒருவர் எனது கணவரின் கையில் தாக்கி விட்டார்கள். உடனே எனது கணவர் மன்னார்குடி அரசு மருத்தவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தார். பின்னர் திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சேர்ந்தார். நானும் எனது கணவரும் மருத்துவமனைக்கு சென்றேன். திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் எனது கணவர் சிகிச்சையிலிருந்தபோது, தலையாமங்கலம் போலீசார் விசாரணை செய்ய வந்திருந்தார்கள். நானும் எனது கணவருடன் உடன் இருந்தேன். எழுதாத ஒரு வெள்ளை பேப்பரில் கையெழுத்து கேட்டார்கள். என் கணவர் போட்டுக்கொடுத்தார். நான் உடனிருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் எனது கணவரின் கையொப்பம் மட்டும் ஆகும். புகாரில் உள்ள எனது கணவரின் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

சம்பவத்தினத்தன்று இரவு 12.45 மணிக்கு எதிரிகள்தான் என் கணவரான மோகனை அடித்தார்கள் என்றும், மேலும் ஜாதியின் பெயரை சொல்லி திட்டினார்கள் என்றும், இது தொடர்பாக என் கணவர் மருத்துவமனையில் இருந்தபோது, புகார் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையில், இந்த எதிரிகள் தாக்கி ஜாதி பெயரை சொல்லி திட்டியதை போலீசாரிடம் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்ட

காரணத்தால் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.04 16:39:28 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.